உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. | விக்கிரம ஹூ புரட்டாசிமீ 1வ செப்டம்பர்-1940 | இதழ் 6. No 6.

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமிமலை)

கடிமா மலர்க்கு ளின்ப முளவேரி கக்கு நண்பு
தருமா கடப்ப மைந்த தொடைமாலை
கனமேரு வொத்தி டும்ப னிருமாபு யத்த ணிந்த
கருணாக ரப்ர சண்ட கதிர்வேலா
வடிவார் குறத்தி தன்போ னடிமீது நித்த முந்தண்
முடியான துற்று கந்து பணிவோனே
வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயி லக்க ணங்க ளியல்போதி
அடிமோனை சொற்கி ணங்க வுலகாமு வப்ப என்று
னருளால ளிக்கு கந்த பெரியோனே
அடியேனு ரைத்த புன்சொ லதுமீது நித்த முந்த
ணருளே தழைத்து கந்து வரவேணும்
செடிநேரு டற்கு டம்பை தனின்மேவி யுற்றி டிந்த
படிதான லக்க ணிங்க ணுறலாமோ
திறமாத வர்க்க னிந்து னிருபாத பத்ம முய்ந்த
திருவேர கத்த மர்ந்த பெருமாளே.

பதவுரை:

கடி - வாசனை தங்கியதும், மா - பெருமை பொருந்தியதும், மலர்க்குள் இன்பம் உள - புட்பங்களுக்குள் இன்பத்தைத் தருவதும், வேரி கக்கு - தேன் துளிப்பதும், நண்புதரு - அருச்சிப்பதனால் உம்முடைய நட்பைத்தர வல்லதும் ஆகிய, மா கடப்பு அமைந்த - பெரிய கடப்பமலர்களைக்கொண்டு புனைந்த, தொடை மாலை - தொடுக்கப்பெற்ற திருமாலைகளை, கனமேரு ஒத்திடும் - பொன்மேருமலையை யொத்து விளங்கும், மா பன்னிரு புயத்து அணிந்த - பெருமைதங்கிய பன்னிரண்டு தோள்களிலும் அணிந்துகொண்டுள்ள, கருணை ஆகர - கருணைக்கு உறைவிடமானவரே! ப்ரசண்ட - மிகுந்த வேகமுடையதும், கதிர் - ஞானவொளியை விசுவதுமாகிய, வேலா - வேற்படையை யுடையவரே!, வடிவு ஆர் - சிறந்த அழகுநிரம்பிய, குறத்திதன் - வள்ளியம்மையாருடைய, பொன்அடிமீது - பொற்பிரகாசம் பொருந்திய திருவடிக்கமலங்களின்மீது, நித்தமும் - நாள்தோறும், தண்முடியானது உற்று உகந்து - குளிர்ந்த மணிமகுடமானது பொருந்த மகிழ்ச்சியுடன், பணிவோனே - பணிபவரே!, வள வாய்மை - வளம்பெற்றவர்க்கும், சொல் ப்ரபந்தம் உள - சொல்லழகுநிரம்பிய நூல்களை யியற்றுவதில் வல்லமையும் உடைய, கீரனுக்கு - நக்கீரதேவருக்கு, உகந்து - மகிழ்ச்சியுற்று, இலக்கணங்கள் இயல்பு - தமிழிலக்கணங்களின் இயல்புகளை, மலர்வாய் ஓதி - மலர்போன்ற திருவாக்கால் ஓதுவித்து, அடி மோனை சொற்கு இணங்க - அடிமோனை சொல் என்னும் யாப்புக்கு இணங்குமாறு, உலகம் உவப்ப என்று - உலகம் உவப்ப என்று, உன் அருளால் அளித்து - தேவரீர் திருவருளால் அடியெடுத்துத் தந்த, கந்த - கந்தப்பெருமானே! பெரியோனே - பெரியவரே! திற மாதவர் - பொறிபுலனடக்குந் திறமையுடைய பெருந்தவமுனிவர்கள், கனிந்து - மனங்கனிந்து உருகி அன்பு செய்து, இரு பாத பத்மம் உய்ந்த - இரண்டு திருவடிக் கமலங்களால் உய்வு பெற்ற, திருவேரகத்து அமர்ந்த - சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! செடி நேர் - பாவத்திற்கு உறைவிடமாகிய, குடம்பை உடல் தனின்மேவி உற்று - பறவை முட்டைக்கு நிகராகிய உடம்பில் விரும்பி பொருந்தி யுறைந்திருந்து, இடிந்தபடி தான் - அம்முட்டை திடீரென்று உடைந்தபடி, இங்கண் அலக்கண் உறலாமோ - இவ்விடத்தில் மரணமாகிய துன்பத்தை அடியேன் அடையலாமோ? (அங்ஙனம் அடையாவண்ணம்) அடியேன் உரைத்த புன்சொல் அதுமீதும் - அடியேன்பாடிய அற்பமான சொற்களாலாகிய பாடலின்மீதும், நித்தமும் - நாள்தோறும், தண் அருளே தழைத்து உகந்து வரவேணும் - குளிர்ந்த திருவருள் மணங்கமழச் செய்து மகிழ்ச்சியுடன் வந்தருள்புரிவீர்.

பொழிப்புரை:

வாசனைதங்கியதும் பெருமை பொருந்தியதும் மலர்களுக்குள் இன்பத்தைத் தருவதும் தேன்துளிப்பதும் அணிவிப்பதனால் தேவரீரது நட்பைத்தரவல்லது மாகியபெரிய கடப்பமலரால் தொடுத்துச்செய்த திருமாலையை, பொன்மேருமலைபோன்றபன்னிரு புயாசலங்களிலும் தரித்துக்கொண்டுள்ள, கருணைக்கு உறைவிடமானவரே! மிக்க வேகத்தை யுடையதும் ஞானப்ரகாசத்தை வீசுவதும் ஆகிய வேலாயுதத்தை யுடையவரே! நிரம்ப அழகிய வள்ளியம்மையாருடைய பொன்னடிக்கமலங்களின்மீது குளிர்ந்த மணிமகுடமானது பொருந்த மகிழ்ச்சியுடன் நாளும் பணிபவரே! செம்பாகமானவர்க்கும் சொல்வளமைப்பு மிக்க நூல்களைப்பாடுந் திறமுடைய நக்கீரதேவருக்கு தமிழிலக்கணங்களின் இயல்புகளை செங்கனிவாய் மலர்ந்து ஓதுவித்து, அடி மோனை சொல் என்ற யாப்புக்கு இணங்க "உலகம் உவப்ப" என்று அடியெடுத்து தந்து திருமுருகாற்றுப்படை யென்னும் சீரியநூலை பாடச்செய்த கந்தப்பெருமானே! பெரியவரே! இந்திரியங்களை வெல்லவல்ல மாதவர்கள் மனங்கசிந்து உருகிவழிபட்டு இருபாதகமலங்களில் உய்வுபெற்ற சுவாமிமலை என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ள பெருமிதமுடையவரே! பாவத்திற்கு உறைவிடமாகிய பறவைமுட்டையை யொத்த உடம்பில் பொருந்தி யிருந்து முடிவில் அப்பறவை முட்டை யுடைந்தாப்போல் உடலைவிட்டு உயிர் நீங்குவதாலாகிய துன்பத்தைஇங்கு அடியேன் அடையலாமோ? அங்ஙனம் அடையாவண்ணம், அடியேன்பாடிய புன்சொற்களையுடைய பாடலின்மீதும் தேவரீருடைய தண்ணருள் மணங்கமழச் செய்து மகிழ்ச்சியுடன் நாளும்வந்து அருள்புரிவீர்.

விரிவுரை:

கடிமாமலர்க்கு:---

மலர்களுக்குள் மிகவுஞ் சிறந்தது கடப்பமலரே என்பதும், அம்மலர்கொண்டு பெருமானை அர்ச்சிக்கில் அப்பரமபதியின் நட்புண்டாகும் என்பதும் இதனால் போதருகின்றன.

வடிவார்.......பணிவோனே:---

வள்ளிநாயகியை முருகவேள் தொழுதாரென்பது ஆண்டவன் ஆன்மாக்களை யாட்கொள்ளும் எளிமையைத் தெரிவிக்கின்றது.

உலகாமுவப்ப:---

“உலகாமுவப்ப என்று உன் அருளால் அளிக்க உகந்த” என்று பிரித்துப் பொருள் கொள்வாரும் உளர்.

முருகப் பெருமான் நக்கீரரை யாட்கொண்ட அழகிய வரலாற்றைத் திருப்புகழமிர்தம் மலர் 4, பக்கம் 134-ல் விரிவாக எழுதியிருப்பதைக் கண்டுதெளிக.

சேடிநேருடற்குடம்பை:---

குடம்பை என்பதற்குப் பரிமேலழகர் உரை செய்திருக்கும் திறனை நோக்குக.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு —திருக்குறள்.

முன்றனியாத முட்டை தனித்துக்கிடப்ப அதனுள்ளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோன தன்மைத்து உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு.

உடம்பும் உயிரும் ஒன்றாகவே யுண்டாகிப் பிறந்து வளர்ந்து இருந்து உண்டு உவந்து பின் உடம்பைவிட்டு உயிர்மட்டும் நீங்கி விடுகின்றது. முட்டையும் அதனுட் பறவையும் ஒன்றாகவே பிறந்து பறவை வளர்ந்தபின் முட்டையை யுடைத்துக் கொண்டு பறந்துபோய் விடுகின்றன. உயிர் பறவையையும் உடம்பு முட்டையையும் ஒப்பாகுமாறுணர்க. முட்டையிற் பிறக்கும் உயிர்கள் பாம்பு எறும்பு முதலிய பிற உயிர்களுமுளவேனும் பறக்கு மியல்பு பறவைக்கே யுளவாதலின், பறவையை யுவமித்தனர். உடைத்துக்கொண்டேகிய பறவை யம்முட்டையில் பின் புகாதவாறுபோல், உடம்பினின்று மேகிய உயிர் மீண்டும் இவ்வுடம்பை யடையாதென்றறிக. நட்பு என்றது நட்பின்றிப் போதலை புணர்த்துகின்றது. “குடம்பைதனின் மேவியுற்று இடர்தபடி தானலக்கணிங்ஙன் உறலாமோ” என்ற நம்சுவாமி

ஓம் குஹாய நம :

கந்தரலங்காரம்

(106 வது பக்கத் தொடர்ச்சி.)

(19) சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.

பதவுரை :

சொன்ன - பொன்னிறமான, கிரௌஞ்சகிரி - கிரவுஞ்சமலையை, ஊடுருவ - நடுவே நுழைந்து செல்லும்படி, தொளைத்த - தொளைசெய்த, வை வேல் - கூர்மை பொருந்திய வேற்படையைத் தாங்கிய, மன்ன - தலைவரே! கடம்பின் மலர் மாலை - கடம்பமரத்தில் மலர்கின்ற நறுமலர் மாலையைச் சூடிக்கொண்டுள்ள, மார்ப - திருமார்பை யுடையவரே! மௌனத்தை உற்று - மௌனநிலையை யடைந்து, நின்னை - தேவரீரை, உணர்ந்து உணர்ந்து - மெய்யறிவால் அறிந்து அறிந்து, எல்லாம்ஒருங்கிய - ஏனையபாசகரணங்களும் பசுகரணங்களும் அடங்கிய, நிர்க்குணம் பூண்டு - முக்குணரகிதத்தை யடைந்து, என்னை மறந்து இருந்தேன் - ஜீவனாகிய

களாது திருவாக்கின் அமைப்பையும் அழகையும் ஆழத்தையும் அருமையையும் அன்பர்கள் உற்று நோக்கி உள்ளம் மகிழ்க. மேற்போந்த திருக்குறளோடு ஒப்புநோக்கி உவப்புறுக.

கருத்துரை:

கடப்பமாலையை யணிபவரே! கதிர்வேலவரே! குறமகள் கொழுநரே! நக்கீரரையாண்ட நல்லிசைப்புலவரே! சுவாமிமலைத் தலைவரே! உடலைவிட்டுநீங்கித் துன்புறுமுன், அடியேனுடைய பாடலுக்கிரங்கி வரவேணும்.

என்னையும் மறந்து சிவோகம்பாவனையில் நிலைத்திருந்தேன், இவ்வுடம்பு இறந்தே விட்டது - இந்தச் சரீரவாசனை முற்றிலும் அழிந்தே விட்டது.

விரிவுரை:

சோன்ன:---

சுவர்ன என்றசொல் தமிழில் சொன்ன என மருவியது. சொன்ன என்பதற்குக் கூறிய என்று பொருள் கொள்வாருமுளர்; அது சிறப்புடைத்தாகாது. நம் சுவாமிகள் பல இடங்களில் கிரவுஞ்சமலையைப் பற்றிச் செல்லும்போது பொன்மயமானமலை என்றருளிச் செய்துளார். அவ்வாக்குகளால் மேற்கூறிய கருத்து நன்கு வலியுறுமாறு காண்க.

"கனகக்கிரியைப் பொரும்வேலா" —திருப்புகழ்.

"தருகுபெயர்பெற்ற கனவடசிகரி" —வகுப்பு.

கனம்---பொன்.

"பொன்னஞ் சிலம்பு புலம்பவருமெங் கோன்" -அலங்காரம்.

மாயைக்கு உறைவிடமாகித் தாரகனுக்குத் துணைசெய்த கிரவுஞ்சமலையைப் பிளந்தெறிந்து, அதனில் மயங்கிக் கிடந்த இலக்கத் தொன்பான் வீரரையும் பூதத்தலைவர்களையும் பெருமான் காப்பாற்றி யருளினர்.

கடம்பின் மலர்மாலை மார்ப:---

முருகக் கடவுளுக்கு கடப்பமலர் மிகவும் உகந்தது. அதனாலேயே பெருமானுக்கு கடம்பன் என்ற திருநாமமும் வழங்குமாறு காண்க.

"பூக்தங் கடம்பா முருகா கதிர்வேலா"

—நக்கீரர்.

"கடிமாமலர்க்கு ளின்ப முளவேரிகக்கு நண்பு
தருகா கடப்பமைந்த தொடைமாலை
கனமேரு வொத்திடும்ப னிருமாபுயத் தணிந்த
கருணாகரப்ரசண்ட கதிர்வேலா"

"பரிமளமிஞ்சக் கடப்பமாலைபு மணிவோனே"

—திருப்புகழ்.

மௌனத்தையுற்று:---

"மோனமென்பது ஞானவரம்பு" என்ற ஞானக்கிழவியின் திருவாக்கின்படி ஞானத்திற்கு எல்லையாக இருப்பது மௌனம். பேசா அநுபூதி பிறந்தவர்க்கே பெருஞ்சுகங்கிடைக்கும். எல்லா விதமான சாதனங்களும் முடிவில் மௌனத்தையே யடைவிக்கின்றன. "கண்மூடி மௌனியாகித் தனியே இருப்பதற்கெண்ணினேன்" என்ற நம் தாயுமான அடிகளின் அனுபவ வாக்கை யுன்னுக.

அருணகிரிநாதருக்கு ஆறுமுகப்பெருமான் தாமேகுருமூர்த்தியாக எழுந்தருளிவந்து மௌனோபதேசம்புரிந்தனர்.

"அருவண நகர்மிசை கருவணயொ டருளிய
மவுனவசனமு மிருபெரு சரணமு மறவேனே"
—திருப்புகழ்.

இந்த மௌனநிலை எளிதில் கிடைப்பதன்று. பலகாலுஞ் செய்தசிவபூசையினாலும், ஆலயவழிபாட்டாலும், சித்தசுத்தியாலுமே கிடைப்பதாம். அதனையாண்டவனிடம் யாசித்துப் பெறுவது எளியவழியாம். அருணகிரிநாதரும் அறுமுகவள்ளலிடம் விண்ணப்பித்த திருவாக்கையும் உய்த்துணர்க.

"சலிலலிபியன சனனமு மலமலம்
இனியு னடியரொ டொருவழி படஇரு
தமர பரிபுர சரணமு மவுனமு மருள்வாயே"
—திருப்புகழ்.

நின்னை யுணர்ந்துணர்ந்து:---

பரமபதியாகிய குமாரக்கடவுளை மெய்யறிவினால் அறிதல்.

"கந்தனை யறிந்தறிந் தறிவினில்
சென்று செருகுந்தடந் தெளிதர" -திருப்புகழ்.

எல்லாமோருங்கிய:---

கருவி கரணங்கள் கழன்று தனித்து நிற்குநிலை.

"எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூபதியே"
—அநுபூதி.

நிர்க்குணம்பூண்டு:---

சத்துவ ராஜஸ தாமஸ மென்ற முக்குணங்களும் நீங்கப் பெற்று, இறைவனது அருட்குணங்களை யடைந்து நிற்குநிலை. நிர்க்குண மென்பதற்கு முக்குணமற்றநிலை என்பதுதான் பொருள். அருட்குணங்களை யடைதல் வேண்டும்.

"அரிவையர்க் கன்புறுத சங்கநந்தவிர முக்குணமாள"

—திருப்புகழ்.

என்னைமறந்திருந்தேன்:---

ஜீவபோதங்கழன்ற இடம். சிவோகம் பாவனையால் ஜீவன் தன்னைமறந்து சிவத்தை நினைந்து நிற்கும்.

"யானுகிய என்னை விழுங்கி வெறுந்
தானும் நிலை நின்றது தற்பரமே"

—அனுபூதி.

இறந்தேவிட்டதிவ்வுடம்பே:---

உடம்பின் வாசனையற்றநிலை. இந்த நிலை வரப்பெற்ற ஞானிகட்கு பிராரப்த மனுபவிக்கினும் அகனுல் வரும் இன்பதுன்பந் தோன்றுத. அதன் வாசனையுந் தொடாது.

"யான்வேறு என் உடல்வேறு
செகத்தியாவும் வேருக நிகழ்ச்சியா மனேதித
சிவச்சொருப மாயோகி யெனஆள்வாய்"

—திருப்புகழ்.

கருத்துரை:

கிரவுஞ்சத்தைப் பிளந்த வேலாயுதரே! கடப்பமலர் மார்பரே! மௌனத்தையுற்று தேவரீரை பதியறிவாலறிந்து கருவிகரணங்களை யிழந்து, நிர்க்குணமுற்று ஜீவபோதங்கெட்டு சிவபோதமுற்றிருந்தேன்; அப்போது உடலின் வாசனை அறவே ஒழிந்தது.

ஓம் குஹாய நம :

சிவா நந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(107-வது பக்கத் தொடர்ச்சி)

க்ரீட[3]ார்தம்[2] ஸ்ருஜஸி ப்ரபஞ்ச[2]மகிலம் க்ரீட[3]ாம்ருக[3]ாஸ்தே ஜநா:
யத்கர்மாசரிதம் மயா ச ப[4]வத: ப்ரீத்யை ப[4]வத்யேவ தத்!
சம்ப[4]ோ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம் மச்சேஷ்டிதம் நிச்சிதம்
தஸ்மாந்மாமகரக்ஷணம் பசுபதே கர்தவ்யமேவ த்வயா!!

பதவுரை :

சம்போ	- சுககாரணரே!
அகிலம்	- எல்லா
ப்ரபஞ்சம்	- உலகங்களையும்
க்ரீடார் தம்	- விளையாட்டாகவே
ஸ்ருஜஸி	- உண்டுபண்ணுகின்றாய்
ஜநா:	- (அவ்வாறுண்டாக்கிய) ஜனங்கள்
தே	- உமக்கு
க்ரீடாம்ருகா	- விளையாட்டிற்காக ஏற்பட்டிருக்கின்றமான்கள்
மயாச	- (அவைகளுக்குள் ஒருவனான) அடியேனாலும்
யத்	- யாதொரு
கர்ம	- காரியமானது
ஆசரித:	- செய்யப்பட்டதோ
தத்	- அது
பவத:	- அடியேனுடைய
ப்ரீத்யைஏவ	- விருப்பத்தின் பொருட்டே
பவதி	- ஆகின்றது
மச்சேஷ்டிதம்	- அடியேனுடைய நடக்கையானது
ஸ்வஸ்ய	- தன்னுடைய
குதூஹலஸ்ய	- மகிழ்ச்சிக்கு
கரணம்	- சாதனம்
இதி	- என்பது
நிச்சிதம்	- நிச்சயம்
தஸ்மாத்	- ஆதலால்
பசுபதே	- ஆன்மாக்களுக்குத் தலைவரே!
த்வயா	- தேவரீரால்
மாமகரக்ஷணம்	- அடியேனைக் காப்பாற்றுதலானது,
கர் தவ்யமேவ	- செய்யத் தகுந்ததே.

பொழிப்புரை:

ஓ சம்புவே! பசுபதியே! எல்லாவுலகங்களையும் தேவரீர் விளையாட்டாகவே உண்டாக்குகின்றீர். உலகிலுள்ள ஆன்மாக்களெல்லாம் விளையாட்டின் நிமித்தமாக உண்டாக்கிய மிருகங்களாவார்கள். ஆதலால் அடியேனால் செய்யப்படுங் கன்மங்களெல்லாம் உமது விருப்பத்திற்காகவேயாகும். அதனால் அடியேனைக் காத்தருள்வது உமக்குக்கடமையாம்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(111-வது பக்கத் தொடர்ச்சி.)

வீரவாகுதேவர் மேருமலைபோன்ற வில்லை யெடுத்துப் போர்க்கோலம் புனைந்துகொண்டுத் தேரேறிப்புறப்பட்டார். இலக்கத்தெண்மரும், படைத்தலைவரும், ஆயிரம் வெள்ளம் பூதங்களும் சூழ்ந்து சென்றனர். அப்பூதர்கள் பூமியை ஒருபுயத்தில் தாங்கும் வன்மையுடையவர்; காலனைக் கொல்லும் திண்மையுடையவர்; அண்டங்களை யுடைக்கவல்லார். முரசறைந்தனர். பானுகோபனிடம் தூதரோடி வீரவாகுதேவர் வருகையை யுரைத்தனர். பானுகோபன் சினந்து "அந்தசிவகுமாரனையும் இத்தூதனையும் பூதர்களையும் இக்கணமே கொல்வேன்" என்று வீரவசனங்கூறி சேனைகளுடன் வந்து போர்புரியலானான். இருதிறத்துப் படைகளும் கலந்து போர்புரிந்தன. அசுரர்கள் வில், வாள், தோமரம், ஈட்டி, கதைமுதலிய ஆயுதங்களைக் கொண்டு அமராடினர். பூதர்கள் மரங்களையும் மலைகளையும் கொண்டு அசுரரை யழித்தார்கள். அவுணர் பலரிறத்தனர்; பூதரும் சிலர்மடிந்தனர். பூதர்கள் யானைகளை யானைகளாலும், தேர்களைத் தேர்களாலும், குதிரைகளைக் குதிரைகளாலும், ஆள்களை ஆள்களாலும் தாக்கியழித்தனர். அவுணர் புறங்கொடுத்தோடினர்.

அனலி என்னும் அசுரப்படைத்தலைவன்கண்டு சினந்து பாணமழை பொழிந்து பூதரை யழிக்க, சிங்கர் என்ற பூதப்படைத் தலைவர் எதிர்த்து அவனைக் கொன்றார். சண்டன் என்னும் அவுணர் தலைவன் எதிர்த்தான். சிங்கர் தண்டாலடிக்க, அவனும் இவரைத் தண்டாலடிக்க இருவரும் மூர்ச்சித்தனர். மாயன் என்னும் அசுரர்தலைவனும் நீலர் என்ற பூதர்தலைவனும் பொருது முடிவில் மாயன் இறந்தான். மூர்ச்சைதெளிந்த சிங்கரும் சண்டனும் மீண்டும் போர்செய்ய சண்டனுடைய தண்டுமுறிந்தது. பிறகு சிங்கர்

அவன் கரத்தைமுறித்தார். சண்டன் முறிந்தகரத்தைக்கொண்டு போர்புரிந்தான். அவன் வீரத்தைக்கண்டு விண்ணவர் வியந்தனர். சிங்கர் அறைந்த அறையால் சண்டன் வீழ்ந்திறந்தான். யமதூதர்கள் அவனுயிரைப்பிடிக்க அஞ்சினர். சிங்கர் "அஞ்சாது உயிரைப்பிடித்தேகுங்கள்" என்றுகூறப் பிடித்தேகினர். ஒருபுறத்தில் அசமுகனும் மதுஎன்ற பூதர்தலைவரும் பொருதார்கள். மது அசமுகனைத் தேரோடுஎடுத்து வீசினர். அசமுகன் வானில்மறைந்து நின்று திருமாலளித்த சக்கரத்தைவிட்டான். நிராயுதபாணிமேல் விட்டதால் அச்சக்கரம் அசமுகனையேகொன்றது. தேவர்கள்ஆரவாரித்தனர். இலக்கம்வீரருள் தண்டகர் என்பவர் வில்லைவளைத்துப் பாணமழை பொழிந்தார். அதனுல் அசுரருடைய நால்வகைச் சைன்யங்களும் அழிந்தன, உதிரவெள்ளம் ஓடியது; இறவாது பிழைத்தவர் புறந்தந்தோடினர்.

அதுகண்ட பானுகோபன் மிகவும் கோபித்து, "தேவர்களை வென்ற நம்சேனைகள் பூதர்களாலழிந்தது ஆச்சரியமே. இக்கணமே நான்சென்று அனைவரையுங்கொல்வேன்" என்றுமுன்னணிக்குவந்து வில்லெடுத்து பல்கோடிபாணங்களால் பூதர்களைச் சின்னபின்னமாயழித்தான். பூதர்கள் வெருண்டு வீரவாகுதேவரைத் தஞ்சம் புகுந்தனர். இதனைக்கண்ட உக்கிரர் என்னும் பூதப்படைத்தலைவர் சினந்து பானுகோபனை எதிர்த்து அவன்தேரையழித்தார். பானுகோபன் நூறு அம்புவிடுத்து அவருடைய கரத்திலிருந்த தண்டத்தை உடைத்தான். உக்கிரர் பானுகோபனுடைய தேரையெடுத்து ஆகாயத்திலெறிந்தார். தேருடன்வரும் பானுகோபனைக் கண்டு, சூரியன் தன்னைப்பிடிக்க வருவதாகஎண்ணி அஞ்சியோடினன். பானுகோபன் கீழேகுதித்து ஒருசூலத்தால் உக்கிரருடைய மார்பைப்பிளக்க அவர் அயர்ந்தார். தண்டி யென்பவர் வந்துபொருது அவருந்தளர்ந்தார். பினுகி முதலிய பூதவீரர்களும் தனித்தனிவந்து போர்செய்துத் தளர்ந்துநின்றனர்.

பிறகு கபாலி, அண்டலோசனர், நிரஞ்சனர்முதலிய இலக்கம் வீரர்கள்வந்து பாணமழைசொரிந்து பானுகோபனுடைய வில்லையுந் தேரையும் பொடிபடுத்தினர். பானுகோபன் வேறு தேரேறி இலக்கம் வீரருடை விற்களையழித்து அவர்களுடம்

பைப் புண்படுத்தினன். இலக்கம் வீரரும் வலிகுன்றி இளைத்து போர்க்களத்தினின்றும் ஒதுங்கிப்போயினர்.

நவவீரருள் ஒருவராகிய வீரகேசரி வந்து எதிர்த்துப் பாணங்களால் அவன்மார்பைத் தொளைத்தார். பானுகோபன் விஷ்ணுப் படையைவிட, வீரகேசரி தாமும் விஷ்ணுப்படையை எடுக்குமுன் அப்படைவந்து வேற்படையினுல் அவருயிரைப்பருகஅஞ்சி உதிரத்தைப்பருகி மீண்டது. அதனுல் அவர் இறந்தவர்போல் மயங்கி விழ்ந்தனர். வீரமார்த்தாண்டர் எதிர்க்க பானுகோபன் அவர்வில்லையுந் தேரையுமழித்தான். அவர் அவன்தேரிற்பாய்ந்து வில்லையொடித்தார். பானுகோபன் வாளால் அவர்மார்பிலும் நெற்றியிலும் குற்றிடவும் கற்பகத்தருப்போல் சாய்ந்தனர். வீரராக்கதர் வந்து பலபாணங்களால் அவன்பணிமகுடத்தை உடைத்தார். பானுகோபன் அவர்தேரையும் வில்லையும்அழிக்க, அவர் அவனைத் தேருடன் எடுத்தெறிந்தார். அவன் அவரை பிரமர்தந்த வேற்படையால் மூர்ச்சிக்கச்செய்தான். மற்றைய வீராந்தகர், வீரமாமகேச்சுரர், வீரதீரர், வீரமாமகேந்திரர், வீரபுரந்தரர் என்ற ஐவரும்வந்து போர்செய்து இளைத்துநின்றனர். அவுணசேனைகள்யாவும் வந்து பானுகோபனைச் சேர்ந்தன.

வீரவாகுதேவர், முருகப்பெருமானுடைய முளரியந்தாளைத் தியானித்து, பிரமவிட்டுணுக்களும்இந்திரனும்வீரலக்குமியுங்கூத்தாட, வில்லைவளைத்து நாணொலி செய்தனர். அதனுல் அண்டங்கள் அதிர்ந்தன. பானுகோபனும் வில்லைவளைத்து நாணொலிசெய்தான். தேவரும் மூவரும் அந்தயுத்தத்தைக்காண விண்மிசை கூடினர். பானுகோபன் வீரவாகுதேவரை நோக்கி "தூதனே! நீ தாரகனையழித்த முருகனுமல்லை; மாலுமல்லை; அயனுமல்லை; இந்திரனுமல்லை; வலியற்றதூதன். பாலனுகிய எனது தம்பியையும் நகரையும்அழித்தனை. இப்போதுஉன்னை இயமபுரத்திற்கு அனுப்புவேன்" என்முன். வீரவாகுதேவர் "வீரர்கள்வீண்வசனம்பேசார்கள். கையாற்பேசுக" என்று பாணமழை பொழிந்தார். பானுகோபனும் பல்கோடிபாணங்களைப் பொழிந்தான். அவ்விருவரும்

பொழிந்தபாணங்கள் உலகெலாம் திரிந்தன; கடல்கிழிந்தன; திக்கஜங்கள் முதலியன கலங்கின; சந்திரசூரியர், தேவர்கள் முதலியோர் ஓடினர்.

பானுகோபன் வீரவாகுதேவருடைய வில்லையறுத்தான். வீரவாகுதேவர் வேறுவில்லையெடுத்து அவனுடைய வில்லையறுத்தார். பானுகோபன் ஆயிரம்பாணங்களால் வீரவாகுதேவர் நெற்றியைத் தொளைத்தான். அவர் அவனுடைய கிரீடத்தைப் பொடிசெய்தார். கதிரவன் அதுகண்டு நகைத்தான், வீரவாகுதேவர் பல்லாயிரம் பாணங்களால் அவனுடைய சிரத்தையும் கரத்தையும் மார்பையும் சல்லடைக் கண்களாகத்தொளைத்தார். உதிரவெள்ளம் பெருகியது. பானுகோபன் சற்று இளைத்துநின்றான். அதுகண்ட அவுணசேனைகள் சூழ்ந்து பாணமழை பொழிந்தன. வீரவாகுதேவர் காலருத்திரர்போல்சீறி பல்கோடிபாணங்களை இடைவிடாது பொழிந்து அவுணப்படையத்தனையும் அழித்தார். உதிரக்கடலாயிற்று. பிணமலைகுவிந்தது. இயமதூதர்களும் சாலோய்ந்தனர். பூதரும், தலைவரும் அதுகண்டு மகிழ்ந்து வீரவாகுதேவரைச் சூழ்ந்து ஆர்ப்பரித்தனர்.

பானுகோபன் அயர்ச்சிநீங்கி, தனதுசேனைகளைக் காணாமல் பிணமலைகளைக்கண்டு, விம்மிதமுற்று, "இவனொருவனே வீரன்! என்னை இதுகாறும் வென்றாரில்லை. நன்று! நன்று! ஒரு நாழிகைக்குள் இவனுடலைப் பிளப்பேன். இன்றேல் வீ்னுடன் எரிபுகுவேன்" என்றுசபதங்கூறி, நாணமும் மானமுங்கொண்டு, கோபத்தீவளர, ஆயிரம்பாணங்களால் வீரவாகுதேவர் தேரையும் வில்லையும் அறுத்தான். வீரவாகுதேவர் வேறுவில்லெடுத்து அவனுடைய வில்லையுந் தேரையுமழித்தார். பானுகோபன் எழுநூறு பாணங்களை வீரவாகுதேவர்மார்பிலழுத்தினான். வீரவாகுதேவர் துன்பின் சுவையைச்சிறிதறிந்து, அவனுடைய அம்புக்கூட்டையழித்து அவனது மார்பையுந் தொளைத்தார். பானுகோபன் அஞ்சி, பிரமதேவர்தந்த சிறந்த மோகப்படையை எடுத்து விட்டான். அது சினந்துவந்து பூதர், வீரர், தலைவர், வீரவாகுதேவர் முதலிய எல்லோரையும் மயக்கி விட்டது. எல்லோரும் அறிவழிந்து தம்பம்போல் நிற்க, பானுகோபன் மகிழ்ந்து பாணமழைச் சிந்தி அவர்களுடம்புகளைத் தொளைத்தான்.

அப்பொழுது ஆன்மாக்கள்தோறும் உயிர்க்குயிராய் நிறைந்துள்ள குமாரக்கடவுள் இதனையுணர்ந்து அமோகப்படையை உண்டாக்கி மோகப்படையை யழிக்கவிட்டருளினார். அதுவரலாம் மோகப்படை விரைவில் அழிந்தது. வீரவாகுதேவர் முதலியோர் மயக்கம் நீங்கி அமோகப்படையைக்கண்டு மகிழ்ந்து முருகவேளுடைய அளப்பருங்கருணையை யுன்னி முருகவேளைத் துதித்தார்கள். அப்படை எம்பெருமான்பால் மீண்டது. வீரவாகுதேவர் மானமுங் கோபமுங் கொண்டு சிவப்படைக்கலத்தை எடுத்தார். பானுகோபன் பயந்து, "இப்படைக்கலம் நம்மைக் கொல்லும்; சிவாத்திரத்தை நாம் எடுத்துக்கொண்டு வரவில்லை; தெய்வப் படைக்கலங்களைக் கொணர்ந்து இவன் வலியைக் கெடுப்பேன்" என்று எண்ணி மறைந்து ஓடித் தன் நகரிற்போயினான். அசுரரும் ஓடி யொளிந்தார்கள். வீரவாகுதேவர்மீது தேவர் மலர் மாரி பொழிந்தார்கள். பயந்தோடினவனைத் தொடர்ந்து கொல்வது தருமமன்று என்று வீரவாகுதேவர் ஏனோருடனும் திரும்பி வந்து குகப்பெருமானைப் பணிந்தனர். பெருமான் வாழ்த்தி, "போர்செய்து இளைத்தீர்கள், இருக்கைபோ யிளைப்பாருங்கள்" என்று அருள்மொழிய, இருக்கை சேர்ந்திருந்தனர்.

பானுகோபன் தன்வீடடைந்து மிகுந்த நாணமடைந்து, தனது போகமாதருடனும் பேசாது சிந்தித்துக் கொண்டிருந்தான். தூதர்கள் நிகழ்ந்ததனைச் சூரனிடங் கூறினர். சூரன் கேட்டு சினந்து நாளை நானேபோய் "சேனையோடு கந்தனை வென்று மீள்வேன்" என்று எண்ணிஇருந்தான். இரவும் கழிந்தோடியது.

(தொடரும்)

ஓம் குஹாய நம:

கற்பு.

(115-வது பக்கத் தொடர்ச்சி)

நளாயனி

திருமணத்திற்குப்பின் சிலநாள்கள் சென்றன. ஒருநாள் மௌத்கல்யர் நளவேந்தனை நணுகி, "மன்னர் மன்ன! என் தவத்திற்கு ஏற்ற இடம் வனமேயாம். ஆதலால் யான் வனஞ்செல்வேன். விடைதாரும்" என்றார். அதனைக்கேட்ட நளாயனியும் தாய் தந்தையரை வணங்கி "யானும் என்கணவனுடன் சென்று அவருடைய தவத்திற்கு வேண்டிய ஏவலைச் செய்வேன். எனக்கும் விடைதாருங்கள்" என்றாள். நளன் மகளை வாழ்த்தி உள்ளம் ஒருவாறு தேறி "குழந்தாய் நின்கணவனுடன் வாழ்ந்து பொன்றாப் புகழை எய்துவாய்" என்று வாழ்த்தி இருவருக்கும் விடை தந்தான். தமயந்தி மகளைத்தழுவி கண்ணீரால் அவளை நீராட்டிக் கதறினாள். மௌத்கல்யர், "வேந்தே! நின் மனைவிக்கு மகளை யனுப்ப விருப்பமில்லைபோலும் ஆதலால், நளாயனி தாய்வீட்டிலேயே இருக்கட்டும். நான் தனித்துச் செல்வேன்" என்று புறப்பட்டார். நளாயனி தாயாரைத் தேற்றிக் கணவனுடன் நீங்கா நிழல்போல் பின்பற்றி நடந்தனள். அரசனும் அரசியும் இது கண்டு மகளையும் மருகனையும் பிரிய மனமின்றித் தொடர்ந்து செல்வாராயினார்கள்.

முனிவர் நளாயனியை நோக்கி, "மாதரசே! நீ என்னைத் தொடர்ந்து வருவது நன்றன்று; நின் மெல்லியபாதம் காட்டில் பருக்கைக் கல்லில் நடக்க வருந்தும். காய் கிழங்கு இலை இவைகளை யுண்டு, சுனைநீரைக் குடித்து நின்றால் வனவாசம் செய்ய முடியாது. பஞ்சணையில் படுத்திருந்த நீ பாறைமேல் படுப்பது

மிகவும் பொருந்தாததாம். மழை, பனி, காற்று, வெயில் இவைக களால் மாறிமாறித் துன்பம் நேரும். பயங்கரமான மிருகங்கள் நிறைந்தகாட்டில் இளமயில்போன்ற நீ எவ்வாறுவசிக்க இயலும். ஆதலால் நீ நின் பிதாவீட்டில் இருப்பாயாக. இடையிடையே உன்னைவந்து யான்பார்த்து மகிழ்விப்பேன். நினது ஆடையா பரணங்களைக் காட்டில் வைத்துச் காப்பாற்ற என்பால் பெட்டியு மில்லை. என் வார்த்தையைத் தட்டாதே. நில்'' என்றார். நளா யனி "காதலரே! காடாயினும் நாடாயினும் உமது அருகிலிருப் பதே எனக்கு சுவர்க்கலோக இன்பம். தங்கட்குப் பணிவிடை செய்வதே எனக்குப் பேரின்பம். உம்மையான் ஒருபோதும் பிரிந் திரேன். தங்களுடன் வந்து தவத்திற்கு வேண்டிய ஏவலைச் செய் வேன்'' என்றனள்.

முனிவர், "பெண்மணியே! கணவன் சொற்படி நடப்ப தன்றோ பெண்கள் கடமை. ஆதலால், நீ இங்ஙனமே நில்'' என் றார். நளாயனி, "அருபிரானேயிர்! தாங்கள் என்கரத்தைப் பிடித்த போது, "உன்னை ஒருபோதும் பிரியவிடேன்'' என்று சூளுரை கூறினீரே, அத்திருமொழியை உறுதியாக்கும் பொருட்டும், பெண்கள் ஒருபோதும் கணவனைப் பிரிந்திருக்கக் கூடாது என்ற தருமத்தின்படியுமே யான் உம்முடன் வருகிறேன் உமது சொல் லைக் காப்பாற்றுவது தங்கள் கடமை'' என்றாள். முனிவர் மறு மொழி சொல்லமுடியாதவராய் "பெண்ணரசே! வனவாசஞ் செய் தற் கொப்ப வருவாயாக'' என்னலும், நளாயனி உடனே விலை மதிக்கப் பெறாத ஆடையாபரணங்களைக் களைந்துவிட்டு, முனி பத்தினிபோல் மரவுரி யுடுத்திக்கொண்டு கணவன் பின்னே நடந் தாள். நளனும் தமயந்தியும் அமைச்சரும் மாவிந்த நகரமாந்தரும் நளாயனியின் பிரிவுக்கு வருந்தி கண் கலங்கிக்கொண்டு அவளைத் தொடர்ந்து செல்வாராயினார்கள். ஜனங்கள் பலவாறு பேசலானார் கள். குமாரக் கடவுளை நிகர்த்த அரசகுமாரர் பலரிருப்ப இக்கிழ வனுக்கு மன்னன் தன் மகளைத் தந்தனனே; இது என்ன புதுமை? என்பார். மன்னனுக்கு அருள் அறிவு அன்பு என்பன சிறிதுமில்லை என்பார். கருணையுடைய தாயேனும் கணவனுக்கு இது தகாதுஎன்று கூறினாளில்லை யென்பார். மதிமிக மந்திரிமார்க ளேனும் மன்னனுக்குக் கூறித்தடுத்திருக்கலாமே? என்பார்.

மாளுந் தருணத் திவன்றனக்கு மனைவி வேண்டுங் கொல்லென்பார்
வாளுண் கண்ணாள் மணஞ்செயச் சம் மதித்த வாறென் கொல்லென்பார்
மீளு வாய்நீ விருத்தனுடன் மின்னே வனமே கே லென்பார்
மூளும் வினையின் பயனென்பார் முதுமைப் பித்தன் முனியென்பார்.

அந்தோ! கானகத்தில் கூரிய அம்பு பாய்வதுபோல் பருக்கைக்கற்கள் இப்பாவையின் பஞ்சினு மெல்லிய பாதத்தில் பாய அதன்வழியே குருதிவடிய, வெயிலால் மேனிவாடி வருந்து மென்பார். காயுங் கிழங்கும் இலையும் சருகும் இம்மடவரல் எவ்வாறு தின்று உயிர்வாழ்வாள் என்பார். தாய்தந்தையர் மிகவும் வருந்தி மனம் பதைக்கின்றனர். ஆனால், நளாயனி சிறிதும் வருந்தாது மலர்ந்த முகத்துடன் கணவனுடன் செல்கின்றாள்; இவளுடைய கற்பின் உறுதியே உறுதி என்பார்.

ஆசையறுத்த அருந்தவனுக் கிரிவைவேண்டுங் கொல்லென்பார்
ஆசைநாண மறியாதென் பதைமெய்ப்பித்தா னிவனென்பார்
ஆசைக்கடியா னனைத்தினுக்கு மடிமையெனக் கண்டனமென்பார்
ஆசையேயோ ருருப்பெற்றிங் கடைந்ததந்தோ கொடிதென்பார்.

“அம்மா குழந்தாய்! நீசெல்லும் வனத்திற்கு நாங்களும் வருவோம். நின்னுடன் இருந்து நீ யனுபவிக்குந் துன்பத்தில் நாங்களும் பங்கெடுத்துக் கொள்வோம்'' என்று புலம்பிக்கொண்டு சென்றார்கள். இவ்வாறு புலம்புகின்ற ஜனங்களையும் தாய்தந்தையரையும் நளாயனி தடுத்து, “நீங்கள் என்னுடன் தொடர்வது முறையன்று, நான் கணவனுடன் போவது முறையாம்; நீங்கள் எல்லீரும் கருணைகூர்ந்து எனக்கு விடைகொடுங்கள்'' என்றுதொழுது அனைவரையும் நகருக்கனுப்பிவிட்டு நளாயனி நாயகனுடன் வனம்புகுந்தாள்.

கொடியவெயிலாலும், கொடும்பசியாலும், முட்புதர்களாலும் நெடியவழியாலும், நீர்விடாயாலும் வருந்திய நளாயனி அத் துன்பங்களைப் பொருள்படுத்தாமல் கணவனுடன் செல்வதே பெருஞ் சுகமெனக்கருதி வழிநடந்தாள். அவளுடைய மெல்லிய திருவடி பருக்கைக் கல்மேல் புண்பட்டு வருவதைக் கண்ட முனிவருடைய மனமும் உருகிற்று. ஆங்கொரு சுனையின் தெண்ணீரை நளாயனிக்குத் தந்து சற்று இளைப்பாறச் செய்து மீண்டும் செல்வாராயினர். வழியில் மானினங்கள் ஓடுவதையும், மயிலினங்கள் ஆடுவதையும், வானம்பாடிகள் பாடுவதையும், கண்டு கண்டு களிகூர்ந்து, தவஞ் செய்தற்கேற்ற ஓர் வளம்பெற்ற வனத்தை யடைந்

தார்கள். ஆங்கு தழையுங் கழையுங் கொம்புங் கொடியுங் கொண்டு ஓர் தவச்சாலை செய்து அதில் தங்கினார்கள். நளாயனி அருகில் கிடைத்த கனி காய்களைக் கொண்டுவந்து திருத்திக் கணவனை யுண்பித்து நன்னீரைக் குடிப்பித்தாள். கணவனுண்டு மிகுந்ததைத் தானுமுண்டு சிறிது களைப்பாறினாள். அவர்களது மேனியை இனியும் வெம்மை தந்து வருத்தக்கூடாதென்று வெயிலவன் மேற்கடலில் குதித்தான். சந்திரன் விளக்கெடுத்துக்கொண்டு வந்தாற்போல் குணதிசையில் எழுந்தான். நளாயனி மென்றழைகளைக் கொண்டுவந்து பரப்பி அதில் கணவனை படுக்கவைத்துக் கால்களை வருடி வழிநடந்த வருத்தத்தை நீக்கினாள். அவர் கண்வளர்ந்த பின் தானும் அவர் காற்பக்கம் படுத்து கண்துயின்றாள். மீண்டும் கதிரவனுதிக்க ஐந்து நாழிகைக்குமுன் எழுந்து நீராடி திருநீறும் மஞ்சள் குங்குமமுந் தரித்து கணவன் எழுந்தவுடன் அவர் திருவடியில் வணங்கினாள். கணவன் நீராடச்சென்றபின் நறுமலர், தருப்பை, சமித்து இவைகளைச் சேகரித்துவைத்து கணவனை எதிர்பார்த்து நின்றாள். அவர்வந்து காலைவழிபாடு செய்தபின் இனிய கனிகளைத் தந்து உண்பித்தாள். அவர் தவத்திலிருந்தபின் அவருக்கு வேண்டிய ஏவல்களைச் செய்துகொண்டிருந்தாள். கணவனுடைய திருவடியைப் பூசித்தும், இன்மொழி யுரைத்தும், நல்லுணவீந்தும், நகைமுகங் காட்டியும், திருவடி வருடியும், விருந்தினரை யுபசரித்தும், அவர் துஞ்சியபின் துஞ்சியும், எழுவதற்கு முன் எழுந்தும் இவ்வாறு கணவன் கருத்துணர்ந்து ஒழுகி வருவாள்.

அவ்வனத்திலுள்ள முனிவர் மனைவியரும் நளாயனியின் உத்தம நடையைப் பின்பற்றி நடப்பாராயினர். மௌத்கல்யர் அவளுடைய பேரன்பையும், இடையறாதுசெய்யும் ஏவலையும், குறிப்பறிந்து நடக்கும் குணத்தினையும் கண்டு உவகை கொண்டு உள்ளங் குளிர்ந்து உடல்புளகித்தனர். அவளுடைய நற்குணங்களை எண்ணி எண்ணி இறும்பூதுற்றனர். பெருஞ் சுகத்திலிருந்து பல தாதியர் பணிபுரியப் பெருந் தகவில் வைகிய அவள் கானகத்தில் சற்றும் இளைப்பின்றித் தனக்குச் செய்யும் தொண்டினை யுன்னி இரக்கங் கொண்டனர்.

திருவும் வென்றும் வனப்புடையாள் தெய்வக் கற்பின் திறநோக்கித்
தருவும் வளர்ந்த தருங்கனிகள் தந்தி விறத தரும் புயலும்
வெருவும் வெயிலுந் தளிர்ந்தினிமை விளைக்குங் கொடிய விலங்கினமும்
ஒருவு மதியும் வழிபுநவும் உரக மணியின் விளக்கெடுக்கும்.

(தொடரும்)

ஸ்ரீ காழி மணியே போற்றி.

இருவினை ஒப்பு எப்படி?

(சிவன் சீரடியார் அடிநாய்: சிராப்பள்ளி நகரவாசி ஒருவன்.)

மனம்:--- சிராமலை வீற்றிருக்கும் ஸ்ரீ தாயும்ஆனசெல்வரை இதுகாறும் உயர்வாகத்தான் போற்றிவந்தேன். விசேடமான நன்மை யெதுவும் அடைந்தேனில்லை. தீயனவாய வறுமை முதலிய பலவித துன்பங்கள் தீர்ந்தேனில்லை. திருஞானப்பாலுண்ட வித்தகர் "நன்றுடையானை, தீயதில்லானை, * * உமையொருபாக முடையானை, சென்றடையாத திருவுடையானை" ---என்று எல்லாம் நம் சிராப்பள்ளிக் குன்றுடையானைப் போற்றிப் புகழ்ந்தனரே. அது என்ன பொய்யா? உபசாரமாக கிலாகித்ததா?.

அறிவு:--- புகலி வேந்தனர் உண்மையே கூறிப் புகழ்ந்தனர். நம் போன்று சமயத்துக்குத் தக்கபடி கூட்டியும் குறைத்தும் பொய்பும் மெய்பும் மிடைந்து பலவாறு சொல்லி வீண்காலம் போக்கித் திரிந்தவரல்லர். சத்தியவழி காட்டிய தயாநிதியாவர்.

மனம்:--- இருக்கட்டும். காழிவித்தகர் சாக்ஷியம் ஒன்று மட்டில் போதாது. மற்றொரு சாக்ஷியும் இருந்தால் ஒன்றுக் கொன்று ஆதரவாக இருக்கும். ஆதலால் வேறு ஒரு சாக்ஷியம் இருந்தால் கூறுக.

அறிவு:--- ஆண்டவன் ஸ்ரீ கந்தவேளினால் ஆட்கொள்ளப் பெற்ற ஸ்ரீ அருணகிரிநாதராகிய பரமாசாரியரும் இச் சிராமலைத் திருப்புகழ்ப் பாமாலையில், பூந்தராய்ப்புரவலனார்

கருத்தையே காட்டி யிருக்கின்றனர். நஞ் சிராப்பள்ளிச் செல்வர் சந்நதியில் தோணிபுரத் தோன்றலார் தூய வுள்ளத்தே எவ்வாறு திருவருள் விளக்கிற்றோ அவ்வாறே அருணகிரி வள்ளற்கும் திருவருள் விளங்கியதாக புலனாகிறது. ஊனக்கண் படைத்த நம்போலியர் பார்வைக்கும், உள்ளத்தே ஞானக்கண் பெற்ற சிவஞானச் செல்வர் பார்வைக்கும் உள்ள தாரதம்மியம் பெரிதும் கூர்ந்து கவனிக்கற்பாலது. என்னை? முதல்வன் காருண்ய சத்தியாகிய உமாதேவியாரைத் தமது திருமேனியில் இடப்பாகமாகிய ஒருபங்கில் கொண்டிருக்கிற காரணத்தாலே இறைவன் எஞ்ஞான்றும் நீங்காத பேரருளாளனாக இருக்கின்றான். அதனால் அருளாகிய நன்றே விளைவிக்கிறானாதலின் (எதிர்மறையாக) தீயது இல்லாதவனாக இருக்கின்றான் என்னும் பொருள் குறித்து "தீதிலாதவர் உமையொருபாலான மேனியர்" என்று திருப்புகழில் மகிழ்ந்தார்கள்.

இறைவர்க்குப் பிறிதோரிடத்திலேயிருந்து யாதொரு செல்வமும் வந்து அடையாமல், தாமே ஒப்பற்ற அழியாப் பெருஞ் செல்வமாய் நின்று, தம்மிட மிருந்து யாதொரு அணுவளவினும் சிறிதளவு பிறரெலாம் பெற்ற மாத்திரத்தால் மட்டும் அவர்கள் ஒவ்வோர் செல்வராதல் வேண்டுமென்பது உணர்த்த எழுந்த 'சென்று அடையாத திருவுடையானை' என்ற சிரபுரச் செம்மலின் கருத்திலும், சுவை யதிகரிக்கும் பான்மையதாக, ஒப்பற்ற தனிப்பெருஞ் செல்வத்திற்கும் ஒரு செல்வம் வந்து கூடியதென அழகிய கற்பனைகண்டு, அதன் மூலம் சண்பை காவலனாரிடத்தே தாம் கொண்டுள்ள தலை யன்பின் மிகுதியை இவ்வளவிற்றென வரைகூற முடியாத அருமையை, அன்புடைய ஆராய்ச்சியாளர்க்கே புலனாகத்தக்கதாகப் பொதிவித்து, சைவநெறி பரந்து உலாவி உலகின் மக்கள் யாவரும் உய்வதன்பொருட்டும், அதற்குத் துணைக்கா

ரணமாய் நிற்பதற்கு பாண்டியர் பெருமான் சிவனடியா ராதற் பொருட்டும், அமணரொடு வாதுசெய்த அருள் கவிமத சீகாழி மாமுனியால் "பாடுந் திருவுடையாய்" என்று விசேடித்துப் புகழ்ந்தார்கள். அவைவரு மாறு:---

(மதுரையின் மீதால வாயினில்
எதிரம ணாரோரெ ணாயிரர்
மறிகழு மீதேற) நீறுப ரந்துலாவச்
செழியனு மாளாக வாதுசெய்
கவிமத சீகாழி மாமுனி
(சிவசிவ மாதேவ காவென வந்து) பாடுந்
திருவுடையாய் தீதி லாதவர்
உமையொரு பாலான மேனியர்
சிரகிரி வாழ்வான (தேவர்கள்) தம்பிரானே.

—(திருப்புகழ்)

பாடிய திருவுடையாய் என்னாது, முக்காலத்திற்கும் பொருந்தும்படி 'பாடுந் திருவுடையாய்' என்றதால், முன்னர் ஆளுடைய பிள்ளையாரால் பாடப் பெற்ற தோடன்றி, இன்றும் வருங்காலத்திலும் அன்பர் எவ ரும் அருட்பாவாகிய தேவாரத்திருமுறையை நியம மாக ஓதவும், அப்படி ஓதுவதனால் அழியாச் செல்வ மாகிய இன்ப நலம் பெறுதற் குரியராதலுமாய நுண் பொருள் விளங்குதல் கண்டு மகிழ்தற்பாலது.

முத்த நிலையிலும் பெத்த நிலையிலும் முதல்வன் உயிர்க் குயிராய் பின்னமற நிற்றலானும், நீக்கமற எங்கும் பரிபூரணனாய் போக்குவரவின்றி என்றும் நிற்றலா னும், இறைவன் வேறாகவும் உயிர் வேறாகவும் தனித் தனியாக இருந்து ஒன்று கூடுதல் இன்மையானும், உலகு உயிர்களோடு ஒற்றித்து நின்று அதனாலே தன் இறைமைத்தச் சிறிதும் இழுக்கின்றி பற்றற நிற்கும் பரம்பொருளை அவனருளின் கண்ணாக நின்று (ஆணவ

இருள் நீங்கி) காண்பதாகிய சிவபோதத்தாலன்றி, மலசகிதமாகிய ஆன்மபோதத்தினாலே (திரிகரணங்களுக்கும் எட்டாத) இறைவனை அடைதல் கூடாமையின், 'சென்றடையாத திருவுடையானை' என அருளினார் எனவும், மற்றும் தங்கள் போதியின் விரிவிற்கியைந்தவாறு அறிஞர் பலவாறாகப் பொருள் விரிப்பர்; அத்தனைப் பொருள்களும்பொருந்தும்; பின்னர் அதற்கு மேலும் பொருள் விஞ்சியே நிற்கும். சைவசித்தாந்த இலக்கணக் கருத்துகளோடு தேவாரம் திருப்புகழ் முதலிய அருட்பாக்களை அநுபவிப்பார்க்கு உவட்டாத இன்பப்பெருக்கு இடையறாதெழச் செய்யும்.

பல படிகள் ஏறிச்சென்று சிராமலைமேல் நாதனை வழிபட வேண்டிய அருமையாயிருத்தலின் தற்காலம் நகரவாசிகளும் பிறரும் அதில் ஈடுபடாத குறையை உய்த்துணரவைக்கும் முறையாலே 'சென்றடையாத திருவுடையான்' என வேடிக்கையாக பொருள் கூறினும் அமையும். அருட்பாக்களெல்லாம் அறிஞர்கள் தகுதிக்கேற்ப பொருள் பலவாறு விளங்கும்.

மனம்:--- இறைவன் நலமே யுடையவன் - நலமே தருவன்; தீயதில்லான் - தீமையே தரமாட்டான் என்பதற்கு இரண்டு சாட்சியங்கள் சித்திக்கப் பெற்றது. ஆயினும் தீயதில்லான் என்பதனை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் இக்காலத்தும் மக்கள் பல துன்பங்களிடை யுழன்று வருகிறதை நேரிடக் காண்கின்றேன். அதை மறப்பது எப்படி?

அறிவு:--- மக்கள் பல துன்பங்களை யனுபவிப்பதைப் பார்த்து ஈஸ்வரன் தீமை கொடுக்கின்றான் என்று கருதக் கூடாது. அவர்கள் முன்னம் ஈட்டிய வினைப் பயன்களை இப்போது அவர்கள் அனுபவிக்கும்படி ஊட்டி வினைகளைத் தீர்க்கின்றான். இப்படிச் செய்வது ஆண்டவனுடைய மறக்கருணையாகும். ஒரு தாயானவள் தன்

குழந்தை தன் ஆணையின்வழி நில்லாது குறும்புகள் செய்யின் பிரம்பாலடித்து வருத்தியும், நோயுற்றால் கசப்பான - கடுமையான மருந்துகளை யூட்டியும், நல்வழிப்படுத்தல் - சுகசௌக்கியப் படுத்தலாகிய தாய் செய்கிற நலங்கள் குழந்தைக்குத் துன்பமாகத் தோன்றினும் உண்மையில் கருணை செய்வதே யாகிறது காண்க.

மனம்:--- சரி இறைவன் நன்றுடையவன், தீயதில்லாதவன் என்று உணர்ந்தேன். என்றாலும் இப்போது நான் வறுமையாலும் செல்வாக்கின்மையாலும் தளர்கின்றேன். அவையினின்றும் நீங்கி அழியா இன்பந் துய்க்க வழி அன்பர் எவரேனும் வகுத்திருக்கின்றனரா? அதைப் பற்றிப் பேசும்.

அறிவு:--- சீகாழிப் பிள்ளையாரால் தமது உயிர்க்கு உண்மைத் தந்தையாகிய சிவசொரூபத்தையே ஒரு வடிவிலே கண்டாங்கு உவந்து அப்பரே என்று அழைக்கப் பெற்ற பெருமிதம் வாய்ந்த திருநாவுக்கரசு மூர்த்திகள் நீ வினவிய குறையை நீக்க வழி உபதேசித்துள்ளனர். அதைச் சொல்கிறேன். கேட்பாயாக.

நம்மிடத்தே பொருள் இல்லாத வறுமைக்காலம், செல்வாக்கு ஒழிந்தமையால் நம் வாய்ச்சொல் செல்லுபடியாகாத நாட்கள் என்று மனம் உடையாமல், (இன்ப துன்பமாகிய பயன்களை உயிர்களின் வினைப்பகுதிகளுக்கேற்ப இறைவன் ஊட்டி வினைகளை தீர்க்கின்றான் என்று உணர்ந்து, மேல் ஆகாமிய வினை சம்பாதிக்காமல் பற்றற்று அருளிலே நின்று, உற்றார், உறவர், பகைஞர், நம்சமயத்தார், புறச்சமயத்தார், சுவயஜாதியார், அந்நிய சாதியார் என்ற பாகுபாடு கருதாமல்) யாவர்க்கும் இயன்ற அளவில் பிச்சையிட்டு, (உண்மையிலேயே எதுவும் இயலாதவழி நல்லுரையாகிலும் வழங்கி) சன்மார்க்க நெறி தவறாமல் ஒழுகி, திருவருளின் வயத்தனாய் நின்று அநுபவித்த லாகிய

சிவஞான மிகுந்து, மெய்யன்புநிறைந்து, புன்மைநெறிகளைத் தவிர்ந்து, ஆலகாலவிஷத்தையுண்டு தேவர்களைக் காத்தருளிய சிவபிரான் திருவடிகளிலே சித்தத்தை வைத்து (சித்தத்தைச் சிவன்பாலேவைத்த செல்வரான இயல்பினாலே வறுமை முதலிய துன்பங்களெல்லாம் தலைகாட்டாது ஒழிய) கலக்கம் என்பது ஒரு சிறிதுமின்றி சிவபெருமானையே தொழுதிருத்தல் வேண்டும். அப்படித் தொழுகின்ற பொய்யிலா மெய்யடியார் நெஞ்சினுள்ளே இறைவன் (எள்ளில் எண்ணெய்போல) விளங்கி நிற்பன். திரிகரணங்களாலும் அடைய முடியாத பரமேஸ்வரனை அவ்விடத்தே கண்டு கொள்ளலாம் என்னும் பொருளமைய---

"இலங்காலஞ் செல்லாநாளென்று நெஞ்சத்திடையாதே யாவர்க்கும் பிச்சையிட்டு, விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு மெய்யன்பு புசப்பெய்து பொய்யை நீக்கித், துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்சம் உண்ட பிரா னடியிணைக்கே சித்தம் வைத்துக், கலங்காதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே."--- என்று தேவாரம் அருளிச் செய்தார்கள். இப்பெருதவியை ஆராய்ந்து பார்க்கின்ற அளவிலே, இறைவன் திருவருளாலே கூட்டப்படுகின்ற முறை புணர்ந்து, இன்பதுன்பங்களை சமானமாகவே வைத்து அநுபவித்துக்கொண்டு, ஆகாமிய வினையை ஆர்சசியாது, அருளையே நாடி, அருள்வயமாய் நின்று ஒழுகல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. இன்பதுன்பம் சமானமாயுறுதலே, இருவினை யொப்பு, அல்லது, கன்மம் துல்ல ஒத்தல் எனப்படும்.

மனம்:--- சற்று நில். கன்மம் துல்ல ஒத்தல் என்பதனால் புண்ணிய பாவவினைகளைத் திராசின் இருதட்டுகளில்வைத்து நிறை சமமாகக் காண்பது என்றல்லவா பொருள்படுகிறது. பாவவினை மிகுந்திருப்பின் மேலும் புண்ணிய வினைகளைச் செய்து அதைச் சமமாக்க இயலாதோ?

(தொடரும்)